# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 27.08.2020. | 1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் (மா.ந.6) துறை அரசாணை (நிலை) எண் 201 நாள் 23–12–2013ல் நகராட்சி மேலாளர் பணியிடத்தினை மாநகராட்சி நிர்வாக அலுவலர் என பணியிடப் பெயர் மாறுதல் செய்து உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.சி1/1002/2014 நாள் 08–06–2014 ன்படி திரு.து.சந்திரமோகன் கண்காணிப்பாளரை நிர்வாக அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கி உத்திரவிடப்பட்டு இப்பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இப்பணியிடத்தில் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியானபடியால் பணிவிதிகளின் படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந6) துறை அரசாணை (ப) எண் 291 நாள் 25–7–2019ன் படி திரு.து.சந்திரமோகன் அவர்களை நிர்வாக அலுவலர் பணியிடத்தில் இருந்து உதவி ஆணையாளர் (பணியாளர்) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து இப்பணியிடம் காலியாக இருந்து வருகிறது.<br>மாநகராட்சி பணிவிதிகளின் படி நிர்வாக அலுவலர் பணியிடம் வகுப்பு –II இனம் –3ல் உள்ள பணியிடமாகும். இப்பணியிடம் கீழ்கண்ட விபரப்படி பூர்த்தி செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது | 134) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

3) Appointment

| Name of the post | Method of Recruitment appointment |
|---|---|
| Administrative Officer | i)By transfer from the holder of the posts of Class II |
| Go.(MS)No 179 Municipal Administration and Water Supply (MC4) Department Dt.05-10-2009 | ii) By promotion from the holder of the posts of Superintendent or Assistant Revenue Officer in the Tamilnadu Municipal Corporation General Subordinate Service . |

4) Qualification

| Name of the post | Method of Appoinment | Qualification |
|---|---|---|
| Administrative Officer | By transfer | Must have worked for a period of not less than 2 years as Accounts Officr |
| Go.(MS)No 179 Municipal Administration and Water Supply (MC4) Department Dt.05-10-2009 | By promotion | Must have worked for a period of not less than two years in the post of Superintendent or Assistant Revenue Officer |

இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண் சி1/1663/2020 நாள் 26–08–2020 ல் வெளியிடப்பட்ட பொதுபணி நிர்வாக அலுவலர் பணியிடத்திற்கான கண்காணிப்பாளர் பணியிடத்தில் இறுதி பணிதேர்ச்சி பெயர் பட்டியலில் கீழ் கண்டவாறு வெளியிடப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பணியாளர் பெயர் | பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | கண்காணிப்பாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.டே..தனசிங் | கண்காணிப்பாளர் | 05.06.1964 | 27.01.1989 | 30.05.2017 |
| 2 | திரு.சு.பாலசுந்தரம் | கண்காணிப்பாளர் | 22.05.1975 | 17.01.1994 | 30.05.2017 |

மேற்படி பட்டியலில் வரிசை எண் 1ல் இடம் பெற்றுள்ள திரு.டே.தனசிங் கண்காணிப்பாளர், கண்காணிப்பாளர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளதால் நிர்வாக அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கத் தேவையான தகுதி பெற்றுள்ளார் தனியரை 37700 – 119500 நிலை –20 என்ற ஊதிய ஏற்ற முறையில் நிர்வாக அலுவலராக பதவி உயர்வு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண் 237 நாள் 26–09–1996ன்படி தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996 ல் நிர்வாக அலுவலர் பணியிடத்திற்கு கணக்கு அலுவலர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாமல் பணிபுரிந்திருக்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ள நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந4) துறை அரசாணை (நிலை) எண் 179 நாள் 05–10–2009 ல் நிர்வாக அலுவலர் பணியிடங்களை பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்திட கண்காணிப்பாளர் அல்லது உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தில் இரண்டு வருடங்களுக்கு குறைவில்லாமல் பணிபுரிந்திருக்க வேண்டும் என்று விதிகளில் தக்க திருத்தங்கள் செய்து வெளியிடப்பட்டுள்ளது .

இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண் சி1/1663/2020 நாள் 26–08–2020 ம் தேதிய இறுதி பணிதேர்ச்சி பெயர் பட்டியலில் வரிசை எண் 1ல் இடம் பெற்றுள்ள திரு.டே.தனசிங் கண்காணிப்பாளர் பணியிடத்தில் 30–05–2017 முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதாலும், இரண்டாண்டுகளை நிறைவு செய்துள்ளதாலும் இவர் மீது குற்ற நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்பதாலும் பதவி உயர்வு பெற தகுதிபெற்றுள்ளார். திரு.டே.தனசிங் கண்காணிப்பாளரை 37700 – 119500 என்ற ஊதிய ஏற்ற முறையில் நிர்வாக அலுவலராக பதவி உயர்வு வழங்கவும், பதவி உயர்வு வழங்கியமைக்கு அரசின் உறுதியாக்கம் பெற வேண்டி அரசிற்கு உரிய முன்மொழிவு சமர்ப்பிக்கவும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம் . சி1/1663/2020

| | | |
|---|---|---|
| | 2)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் (மா.ந.6) துறை அரசாணை (நிலை) எண் 48 நாள் 22–05–2012 ல் 18 பணியிடங்கள் புதியதாக தோற்றுவித்து உத்திரவிடப்பட்டுள்ளது . இதில் கணக்கு அலுவலர் பணியிடம் 1ம் அனுமதிக்கப்பட்டுள்ளது/ இப்பணியிடம் தற்போது வரை பூர்த்திசெய்யப்படாமல் உள்ளது. மாநகராட்சி பணிவிதிகளின் படி கணக்கு அலுவலர் பணியிடம் வகுப்பு –II இனம் – 4ல் உள்ள பணியிடமாகும் இப்பணியிடம் கீழ்கண்ட விபரப்படி பூர்த்தி செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது . | 135) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கப்ட்டது |

3) Appointment

| Name of the post | Method of Recruitment appointment |
|---|---|
| Accounts Officer | i) By promotion from the holder of the posts of Superintendent or Assistant Revenue Officer in the Corporation General Subordinate Service<br>ii) By transfer from the holder of the posts in Class II |

4) Qualification

| Name of the post | Method of Appoinment | Qualification |
|---|---|---|
| Accounts Officer | By promotion and by transfer | Must have worked as superintendent of the Accounts Branch and as Accountant for a period of not less than two years in each of the posts |
| Ammenment | | |
| Go.(MS)No 179 Municipal Administration and Water Supply (MC4) Department Dt.05-10-2009 | By promotion and by transfer | Must have worked for a period of not less than two years in the post of Superintendent or Assistant Revenue Officer |

இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண் சி1/1663/2020 நாள் 26–08–2020 ல் வெளியிடப்பட்ட பொதுபணி நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் பணியிடத்திற்கான கண்காணிப்பாளர் பணியிடத்தில் இறுதி பணிதேர்ச்சி பெயர் பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு வெளியிடப்பட்டுள்ளது

| வரிசை எண் | பணியாளர் பெயர் | பதவி | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | கண்காணிப்பாளர் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.டே.தனசிங் | கண்காணிப்பாளர் | 05.6.1964 | 27.01.1989 | 30.05.2017 |
| 2 | திரு.சு.பாலசுந்தரம் | கண்காணிப்பாளர் | 22.5.1975 | 27.01.1989 | 30.05.2017 |

| | | |
|---|---|---|
| | மேற்படி பணிதேர்ச்சி பட்டியலில் வரிசை எண் 2ல் இடம் பெற்றுள்ள திரு.பாலசுந்தரம் கண்காணிப்பாளர், கண்காணிப்பாளர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளதால் கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கத் தேவையான தகுதி பெற்றுள்ளார். எனவே தனியரை 37700 – 119500 என்ற ஊதிய ஏற்ற முறையில் கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலக குறிப்பு** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண் 237 நாள் 26–09–1996ன்படி தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகள் 1996 ல் கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு கணக்கு பிரிவில் கண்காணிப்பாளராக பணிபுரிந்திருக்க வேண்டும் எனவும், கணக்கராக 2 ஆண்டுகளுக்கு குறையாமல் பணிபுரிந்திருக்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ள நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந4) துறை அரசாணை (நிலை) எண் 179 நாள் 05–10–2009 ல் நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களை பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்திட கண்காணிப்பாளர் அல்லது உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தில் இரண்டு வருடங்களுக்கு குறைவில்லாமல் பணிபுரிந்திருக்க வேண்டும் என்று விதிகளில் தக்க திருத்தங்கள் செய்து வெளியிடப்பட்டுள்ளது.<br>இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண் சி1/1663/2020 நாள் 26–08–2020 ம் தேதிய இறுதி பணிதேர்ச்சி பெயர் பட்டியலில் வரிசை எண் 2ல் இடம் பெற்றுள்ள திரு.பாலசுந்தரம் கண்காணிப்பாளர் பணியிடத்தில் 30–05–2017 முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதாலும், இரண்டாண்டுகளை நிறைவு செய்துள்ளதாலும் இவர் மீது குற்ற நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்பதாலும் பதவி உயர்வு பெற தகுதிபெற்றுள்ளார். திரு.சு.பாலசுந்தரம் கண்காணிப்பாளரை 37700 – 119500 என்ற ஊதிய ஏற்ற முறையில் கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்கவும் , பதவி உயர்வு வழங்கியமைக்கு அரசின் உறுதியாக்கம் பெற வேண்டி அரசிற்கு உரிய முன்மொழிவு சமர்ப்பிக்கவும் மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>சி1/ 1890/2020 | |
| | 3) இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பக்கிள் ஓடையில் அமலைச்செடி புல் மற்றும் கழிவு மண்களால் நிரம்பி உள்ளது. தற்போது பருவ மழையினை முன்னிட்டு மழைநீர் தங்குதடையின்றி செல்வதற்கு பக்கிள் ஓடையினை தூர்வாரி சுத்தம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி இவ்வலுவலக ந.க.எண். | 136) அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | எச்3/3764/2018 செயல்முறை ஆணையின்படி அமைக்கப்பட்டுள்ள விலை நிர்ணய குழு மதிப்பீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ள பட்டியலில் தெரிவித்துள்ள தொகையின் அடிப்படையில் இயந்திரங்களைக்கொண்டு கால்வாய்கள் தூர்வாறுதல் மற்றும் சுத்தம் செய்யும் பணிக்கு உத்தேசமாக ரூ. 25,00,000/– ஆகும். மேற்படி பக்கிள் ஓடை தூர்வாறும் பணிகளுக்கு ஆகும் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும் அவசர அவசியம் கருதி பிரிவு 15ன் கீழ் தூர்வாறும் பணியினை உடனடியாக மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>எச்3/3764/2018 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.27.08.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி